16th March 1964]

நிபுணர்கள் கட்டடக் கலை நிபுணர்கள், அதாவது பிராசீன முறைப்படி ஸ்தபதிகளின் விளக்கமும், அங்கீகாரமும், முழு உதவியும் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய வசதிகளையும் வற்புறுத்தலையும் அரசாங்கம் செய்து வந்திருக்கிறதா ? அப்படிச் செய்து வராவிட்டால், இனிமேல் அப்படிச் செய்ய முயலுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உறுப்பினர் கூறுகிறபடி தான் அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. மதுரை ஸ்ரீ மீனுக்ஷியம்மன் கோவிலிலும் அவ்வாறுதான் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : இப்படிப்பட்ட பழம் பொருள்களைச் செப்பனிடுகிற நேரத்தில், இத்தாலி, எகிப்து போன்ற நாடுகளில் பழைய மெருகு கெடாது, உருக்கெடாமல், புதிய விஞ்ஞான முறைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த முறைகளை அறிந்து செய்ய வேண்டும் என்று பணிக்கர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த முறைகளை அரசாங்கம் அறிந்து நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிற விஷயம். ஆனால், நிபுணர்களின் கருத்தில் வேற்றுமைகள் இருக்கின்றன. ஒரு நிபுணர் நன்றாக இல்லை என்று சொன்னால் மற்றொரு நிபுணர் நன்றாக இருக்கிறது என்று சொல்லுகிறார். கூடிய வரையில் நம்முடைய நாட்டு நிபுணர்கள், அயல்நாட்டு நிபுணர்கள் தொன்மையை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்று சொல்லுகிற அபிப்பிராயங்கள், சிற்பிகள், ஸ்தபதிகள் ஆகியவர்களுடைய அபிப்பிராயங்கள் சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுதான் இந்தத் திருப்பணி வேலைகள் உருவாக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

***273** கேள்வி—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் திருப்பணிக்குச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதற்கெனத் தமிழக அரசாங்கம் அளித்த நிதி எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Rs. 22,34,706–95 nP. up to October 1963.

(இ) Nil.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இதில் பொது மக்கள் கொடுத்து உதவிய தொகை எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 'டொனேஷன்' என்ற காலத்தில் ரூ. 6,65,633·23 வந்திருக்கிறது. உண்டியல், அர்ச்சனை டிக்கட் விற்பனை செய்தது ஆகிய வகைகளிலே வந்திருப்பது ரூ. 4,31,219·38.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தமிழ் நாட்டிலுள்ள மற்ற கோவில்கள் மூலமாக 'டைவர்ஷன் ஆப் பண்ட்ஸ்' மூலம் ஸ்ரீ மீனுக்ஷியம்மன் கோவிலுக்கு அளிக்கப்பட்ட பணம் எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது ரூ. 11,98,502.

* 274 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute an All-India Committee for the renovation of the temples; and

(*b*) if so, the names of the members and the functions of the committee?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) This Government is not aware of any such proposal.

(*b*) Does not arise.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : அம்மாதிரி ஒரு கமிட்டி அகில இந்திய ரீதியிலே அமைக்கப்படாவிட்டாலும்கூட, மாகாண ரீதியிலே அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு எல்லாக் கோவில்களுக்கும் சேர்த்து மாகாண ரீதியிலே கமிட்டி அமைக்கிற நோக்கம் இல்லே. பொதுவாக அறநிலேயப் பாதுகாப்பு இலாகாவிலே ஆலோசனைக் குழு ஒன்று இருக்கிறது. அவர்கள் யோசனை சொல்லுகிருர்கள். ஒரு தேவஸ்தானத்தில் திருப்பணி செய்ய வேண்டிய நிமித்தம் இருந்தால், அந்த தேவஸ்தானத்தின் நிலேக்கு ஏற்றவாறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : 'யுனெஸ்கோ' மூலம் இந்தமாதிரி கோவில் திருப்பணிகளுக்குப் பண உதவி செய்வது சம்பந்தமாக நம் சர்க்கார் அவர்களே அணுகிக் கேட்டார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் இது பற்றி யுனெஸ்கோ பிரதிநிதியுடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் உதவி அளிக்கக் கூடும் என்று சொன்னுர்கள். சில நிபந்தனைகளேயும் குறிப்பிட்டார்கள். எவ்வாறு அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறினுர்கள். அதெல்லாம் ஒன்றிரண்டு முக்கியமான கோவில்கள் விஷயத்தில் இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

* 275 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the tower of Srivilliputhur Andal temple in Ramanathapuram district is in dilapidated condition at present; and

(*b*) whether there is any proposal to repair the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Some cracks have developed in the tower.

(*b*) It is under consideration of the Government.

திரு. சா. கணேசன் : ஆண்டாள் கோவில் கோபுரத்தில் சில வெடிப்புகள் கண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம் கோபுரத்தின் வலது பக்கத்தில் ஒரு டிரையினேஜ் ஓடிக் கொண்டிருப்பதாகவும், அதன் காரணமாகத் தண்ணீர் ஊறி, கீழ் புதைவடை அல்லது பவுண்டேஷன் என்று சொல்லுகிருர்களே அந்தப் பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மராமத்து இலாகா என்ஜினீயர்கள் இதைக் கவனித்துக்கொண்டிருக்கிருர்கள். மேற்கொண்டு இதைச்சரிப்படுத்துவதற்கு, உடனடியாகச் சரிப்படுத்துவதற்கு சில நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் நிரந்தரமாக இதற்கு வேண்டிய மராமத்து செய்வதோடு, இம்மாதிரி நிகழாமல் பாதுகாப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதும் மராமத்து இலாகா என்ஜினீயர்களின் கவனத்தில் இருக்கிறது.

திரு. சா. கணேசன் : அந்த என்ஜினீயர்கள் இந்தக் கோபுரத்தையே இடித்துவிட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. உண்மையில் என்னேப் போன்ற இந்தத்துறையிலே ஒரு ஈடுபாடு அல்லது பக்தி உள்ளவர்களுக்கும், அந்த அறிவு ஓரளவு உள்ளவர்களுக்கும் இடிக்காமல் அதை நிச்சயம் செம்மை செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த நிலேயிலே அதைச் செம்மையாக பிராசீன முறையிலே ரிப்பேர் செய்ய முடியும்—புதிய முறைகளிலே எப்படிச் செய்வார்களோ எனக்கு ஒன்றும் அறிவு இல்லே—இந்தத் துறையிலே செய்ய முடியும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதற்கு வழி வகை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.